Reg. No. M. 2997.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondicherry.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நெ. 4, புதுவை

VOL. I. புதுவை, ஸ்ரீமுக ௵ பங்குனி ௴ ௩௰௨ (12—4—34) No. 20.

திருமந்திரம்

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தே
னுடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டே
னுடம்புளே யுத்தமன் கோயிற்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

சுழற்றிக் கொடுக்கவே சுத்திக் கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கு முபாய மறிவார்க்
கழற்றித் தவிர்ந்துட லஞ்சன மாமே.

அஞ்சனம் போன்றுட லையறு மந்தியில்
வஞ்சக வாத மறுமத் தியானத்திற்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறு
நஞ்சறச் சொன்னோ நரைதிரை நாசமே.

ஈழநாடும் தமிழும்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்

வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்

அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது)

(19-ம் வாரத் தொடர்ச்சி).

செகராசசேகரன்

இவன் முன்னர்க்கூறிய பரராசசேகரனுடைய தம்பி. பரராசசேகரன், தந்தைக்குப்பின் அரசனாகி நல்லூரிலிருந்து யாழ்ப்பாணநாட்டை ஆளுங்காலத்தில், இவன் அவன் கருத்தோடு ஊர்கடோறும் தமிழ்ப் பாடசாலைகள் தாபித்தும், தமிழ்ச்சங்கமொன்று தாபித்தும் தமிழை வளர்த்தான். புலவர்களைக் கொண்டு பல வகை நூல்களையுஞ் செய்வித்தான். அழிந்து போன "சரசுவதி மகாலய" மென்னும் பெயர் படைத்த புத்தகசாலையைப் புதுக்குவித்து அதில், இந்தியா தேசத்தினின்றும் வடமொழி தென்மொழி நூல்களை வருவித்து வைத்துப் பலரும் படிக்குமாறு உதவினான். புலவர்களாற் புதுப்புது நூல்களையுஞ் செய்வித்தான். புலவர்களுக்குப் பரிசிலுமீந்தான். அது பற்றி அவர்களால் "ஐந்தருவும் நவநிதியுங்குலமணியும் ஆவுமொன்றாய் வந்தனைய கொடைக்குரிசில்" எனப் புகழப்பட்டான். இவனாற் செய்விக்கப்பட்ட நூல்களுள் இப்போது வழங்குவது 'செகராசசேகரமாலை' யென்னுஞ் சோதிட நூல். அது சோமசீயர் என்பவரால் ஆக்கப்பட்டது. அதனை அந்நூற் பாயிரத்து வரும் "ஐந்தருவு நவநிதியு மென்னு முதலையுடைய செய்யுளில் வரும்," "கந்தமலையாரியர் கோன் செகராசசேகரமன் சிங்கை நாடன்" என்று பாடியாலும்

"தன்கடவுட் கருதிசனின்மனமெனுஞ்சோதிட மநனைத்தலைத் [திண்மீது
மின்குலவு தென்கலையாத்தருகவெனவருள்புரிய விருத்தப்பாவாற்
பொன்குலவு செகராசசேகரமாலையைச்செய்தான் பொருந்து [மேன்மைத்
தொன்குலவு மிராசவிராசசேகரனுள் சோமனெனுஞ் சுருதி [யோனே"

என்னுஞ் செய்யுளாலும் அறியப்படும்.

இவன் காலத்திலேயே பண்டிதராசரென்னும் புலவரால் "ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணம்" இயற்றப்பட்டதாகும், அதனை, கவிவீரராகவரென்னும் புலவராலியற்றப்பட்ட அந்நூற் பாயிரத்துள் வரும்.

"அந்நாட் டரசனரியர் கோமான்
பொன்னாட்டைத்தரு பொருவருசரதலன்
மறுகில நிருபரை வானிலத் திருத்தி
யுறுநில முழுவது மொருதனி புரப்போன்
றென்னிலங்காபுரித் திசை தொறு மருவும்
மின்னிலங்கியவேல் மேவலர் புயத்துப்
படவரா முடித்தலைப் பார் முழுதாண்ட
இடப வான் கொடி யெழுதிய பெருமான்
சிங்கை யாதிபன் சேதுகாவலன்
கங்கை நாயகன் கருங்கடற்சேர்ப்பன்
பௌவ மேற்றுயில் பராபரன் சூட்டிய
தெய்வ மாமுடிச் செகராச சேகரன்
அவனது காலத் தந்திரி கோணேச
சிவனது கோயிற் சிவ மறை முதலோன்
அருமறை யுபநிட மாகமஞ் சோதிடம்
வடதமிழ் வரையற வளங்கிய குரவோன்
சேயினுந் திறலோன் நயாதிதியனையான்
முப்புரி நூற்புயன் முனசியர்த்தாமன்
செப்பரு பண்டித ராச சிகாமணி
என்னு நாமத் தென்குரு பெருமான்
மன்னு நாற்கவியும் வல்ல நாவலனே"

என்னுஞ் செய்யுளடிகளானறிக.

அரசகேசரி

அரசகேசரி என்பவர் ஏறக்குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே யாழ்ப்பாணத்து நல்லூரிலிருந்து அரசாண்ட பரராசசேகர மகாராசாவின் மருகராவர். திருநெல்வேலியில் வசித்த பாண்டிமழவன் மரபிற் பிறந்தவளும் பரராசசேகர மகாராசாவின் இரண்டாம் மனைவியுமாகிய வள்ளியம்மையின் மகளை விவாகஞ் செய்தவர். இம்முறையினாற்றான் மருகர் போலும். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தை நோக்கும்போது பரராசசேகரன் கி. பி. 1260-ல் பாண்டியன் மரபில் வந்தவனும், ஜயவீரசிங்கை ஆரியப்பட்டம் பெற்றவனுமுள்ள ஒருவன் வழித்தோன்றலாகக் காணப்படு

கிருன். ஆனல் செகராசசேகரமாலை என்னுஞ் சோதிட நூலின் சிறப்புப்பாயிரம் அதற்கு மாருகக் கூறுகின்றது. சிறப்புப்பாயிரத்திலே, இராமபிரான் தான் தாபித்த இராமேசுரரைப் பூசிக்கும்படி பாசுபதர்களாகிய பஞ்சக் கிராம வேதியர் ஐஞ்ஞூற்றுப் பன்னிருவரை அழைத்து,

" பூசனை செய்மி னீரெனக் கருணை புரிந்தவர் தங்களி லிருவர்
காசினி தாங்கும் படிவரங் கொடுத்துக் கமழ்செழுர் துளப
[மாலிகையும்
மாசறு சுருதி யாரியவேந்தென் றணிமணிப்பட்டமுங் கொடுத்து
தேசறு குடையு மொற்றையும் வெற்றித் திகழ் விடைத் துவசமு
[நல்க''

"அன்றுமுதல் சதுர்யுக காலாதிற் புவிபுரந்தவரசர் குலத்தில் வந்தவனுகக் கூறப்பட்டுள்ளது. செகராச சேகரமாலை செய்தவர் சோம ஐயர். ஆதலின் பரராசசேகரன் மரபு நன்கு ஆராயத்தக்கது. நிற்க,

அரசகேசரி என்னுமிவர் வடமொழி தென்மொழி என்னும் இருமொழிகளிலும் வல்லவர். இவர் செய்த நூல் தமிழ் இரகுவமிசம். அந்நூலை இவர் வடமொழி இரகுவமிசத்தனின்றும், அதன் ஆசிரியரான காளிதாச மகாகவியின் மொழி வழிச்சென்று "உரைவழி நன்னெடுங் குன்றிசைப்பது" போல தமிழில் மொழி பெயர்த்துச் செய்தது மிகவும் புகழத்தக்கது. இவரின் மொழிபெயர்ப்புச் சாதுரியத்தை, மேற்காட்டிய இருமொழியினும் வல்ல புலவர்கள் நன்கு பாராட்டுவர்கள். அதற்குச் சான்ருக ஒன்று காட்டுதும்

"ஸராஜ்யம் குருணுதத்தம் பிரதிபத்யாதிகம் பபௌ
திகாந்தெ கிஹிதம் தேஜஸ் சவித்திரேவஹ—
தாச க : ||

என்னும் வடமொழி இரகுவமிச சுலோகம், தமிழ் இரகுவமிசத்தில்,—

''கனைகழல் வீரனுங் காவ லான்றரு
புனைமணி முடியொடும் பொலிந்து தோன்றினன்
தினகரன் திவாந்தகா லத்திற் சேர்த்திய
வினவொளி கொடேன விலங்கிற்றென்னவே''

என, இவரால் மொழி பெயர்க்கப்பட்டது. இதனுல் இவரது மொழி பெயர்ப்பு வன்மையை அறிந்து கொள்க.

இவர் இரகுவம்மிசத்தைப் பாடுங்காலத்தே நல்லூரின் கீழ்ப்பாகத்திற் பொருந்திய நாயன்மார்கட்டிலுள்ள தாமரைக் குளத்தருகே இருந்து பாடினுரென்றும் அதற்குச் சான்ருக நாட்டுப்படலத்திலே முதலில் குளங்களின் வருணனையே கூறப்படுகின்றது என்றும் ஆன்ருேர் கூறுவர்.

அன்றியும், வயன் முதலியவற்றை வருணிக்குங்காலும் அக்குளத்தருகே உள்ள வயல்களையும் பக்கங்களில் நடப்பட்ட கமுகு, வாழை, கரும்பு முதலியவற்றையும் பார்த்தே வருணித்தார் என்பர். அங்ஙனமாதல்,

"கூறுவேழத்தி னரம்பையின் வளர்தன கதிர்க
ளூறு செய்திடத் தொடுத்த கூன்குயமொத்த வேனும்
பாறு செட்டிலைப் பூகமேல் வீழ்ந்தன பழுக்காய்த்
தாறு வேறிடக் கொளீஇயன தோட்டியிற் றங்கும்."

என்பதனுன் நன்கு அறியப்படும். இவர் இருந்த இடம் இப்பொழுதும் 'அரசகேசரிவளவு, என்னும் பெயரோடு நல்லூரிலுள்ள யமுனுரி என்னும் ஏரியின் பக்கத்துள்ளது.

இன்னும், அந்நூல் கம்பருடைய இராமாவதாரமென்னும் நூலைப் பின்ருெடர்ந்தே பாடப்பட்டுள்ளது. ஆயினும் கடினமான சொற்பிரயோகங்களை யுடைமையானும் வடமொழி நூலைப் பெயர்த்துப் பாடினமையானும் கற்ருேர்க்கன்றி மற்ருேர்க்குணர்ந்து சுவைத்தல் கூடாதாயிற்று.

இவர் சிலப்பதிகாரமென்னும் நூலில் அதிகப்பயிற்சியுள்ளவரென்பது அந்நூற் பிரயோகங்களை இதனுளமைத்துக் கூறு மாற்ரு னறியப்படும். சிலப்பதிகாரத்தில்,

''பரிமுக வம்பியும் கரிமுக வம்பியும்
அரிமுக வம்பியு மருந்துறை யியக்கும்
பெருந்துறை மருங்கில்.''

என்னு மடியில் வரும் அம்பி விசேடங்களை (அம்பி—தோணி)

அரிமுக மகித்து வீழு மான்மத வளறு காதக்
கரிமுக வோட மூர்ந்து சிலதியர் மருங்கு காப்பச்
சுரிமுக சொற்றி துற்றச் சுடர்மணிவர்க்கத் தொக்க
பரிமுக வோட மூர்ந்து சிலதியர் மருங்கு போனர்.

என்னுஞ் செய்யுளிலமைத்தும்,

"கன்று குணிலாகக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி''

என்றும்

"பாம்பு கயிருகக் கடல் கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயின்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி''

என்றும்,

(8-ம் பக்கம் பார்க்க)

உ
திருவருள் துணை.

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை,
ஸ்ரீமுக ஹூ பங்குனிமீ 30உ

உடம்பின் பயன்

உடம்பை ஓம்பவேண்டும் என்பது யாவர்க்கும் ஒத்த முடிபாகின்றது. இதனை எவரும் மறுக்கார். சிவமுயற்சியின் நோக்கம் இதுவே. உடம்பைஓம்புவது எதன்பொருட்டு? எனின், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களை அடைதற் பொருட்டே என்று கூறப்படும். மறம் பொருள் துன்பம் மரணம் என்பன உலகியல். அஃதாவது தந்திரம் என்னும் மறத்தால் நிலையாப் பொருளை ஈட்டுதலும், அதனை ஈட்டுதற் கண்ணும் ஓம்புதற்கண்ணும் அநுபவித்தற்கண்ணும் நிறை முறை அறியாது பல்லாற்றானும் துன்புறுதலும், பின் இவற்றின் பயனாக மரணம் அடைதலுமே உலகியல் என்பது. அநித்தியமாகிய இவ்வுலகியலை மாற்றி நித்தியமாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றை அடைதல் வேண்டும். அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றை அடைவது எவ்வாறு? நமது உடலுள் வித்தாய் இருக்கும் ஆசானை—அறவாழி அந்தணனை—அறம் உருவாகி நின்ற அரங்கனை—மறையாய்—மறை பொருளாய்—மறைந்திருக்கும் இறைவனைக் காண்பதனாற்றான் அடைய முடியும். அன்றேல் முடியாது. வாய்மையான அறவடிவினனாய், பொருள் வடிவினனாய், இன்ப வடிவினனாய், வீடு பேறாய் நிற்பவன் நமது உடலகத்து மறைபொருளான இறைவனே அல்லவா? அவ் இறைவனைக் காண்பதே உடம்பின் பயனாகும். பின் வரும் பிரபல சுருதிகள் இவ் உண்மையை நன்கு வற்புறுத்துதல் கண்டுகொள்க :

ஔவை குறள்

உடம்பின் பயன்

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினி லுத்தமனைக் காண். 1

ஒருபய னாவ துடம்பின் பயனே
தருபயனாஞ் சங்கரனைச் சார். 3

உடம்பினா லன்றி யுணர்வுதா னில்லை
யுடம்பினா லுன்னியதே யாம். 5

மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு. 6

உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே
அயிர்ப்பின்றி யாதியை நாடு. 8

உடம்பினாற் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு. 9

அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லா
முன்னோனைக் காட்டி விடும். 10

அப்பர் தேவாரம்

"..................................
தேடிக்கண்டுகொண்டேன், திரு-
மாலொடு நான்முகனும்
தேடித்தேடொணாத்தேவனை யென்னுளே
தேடிக் கண்டு கொண்டேன்..." 12
(ஷை திருஅங்கமாலை.)

திருவாய் மொழி

நெய்க்குடத்தைப்பற்றியேறு
மெறும்புகள்போல்நிரந்தெங்கும்
கைக்கொண்டுநிற்கின்றநோய்காள்
காலம்பெறவுய்யப்போமின்
மெய்க்கொண்டு வந்து புகுந்து
வேதப்பிரானார்கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணையோடும்
பண்டன்று பட்டினங்காப்பே.
(ஷை பெரியாழ்வார்—செ. 1)

திருமந்திரம்

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தே
னுடம்பினுக்குள்ளேயுறுபொருள் கண்டே
னுடம்புளே யுத்தமன் கோயிற்கொண்
டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின்றேனே.
(ஷை 3-ம் தந், 5-வது சரீரசித்தியுபாயம் 2)

உடம்பினால் ஆய பயன்—அதனை ஓம்புதலால் ஆய பயன் அதனுள் மறை பொருளாய் இருக்கும் உத்தமனை—வேத வடிவாகிய ஆசானைக் காண்பதே—கண்டு புருஷார்த்தங்களை அடைவதே என்பது மேலே கூறிய பிரமாணங்களால் வெள்ளிடை ஆகின்றது.

உடம்பு எதனால் ஆக்கமுறுவது? அன்னத்தால் ஆக்கமுறுவது. இது பற்றியே "அன்னத்தாலாய உடம்பு" என்றனள் ஔவை. அன்னமும் தண்ணீரும் மனதுக்கும் பிராணனுக்கும் காரணமாகின்றன. இது பற்றியே பிராணனிடத்தே ஜலகாரியத் தன்மையையும் மனத்தே பிருதிவி ரூப அன்னகாரியத் தன்மையையும் சாந்தோக்கிய உபநிடதம் வற்புறுத்துவதாயிற்று என்க. இதனால் தூல சூக்கும சரீரங்களின் அந்நியோந்நிய சம்பந்தம் நன்கு புலனாகும். விரிப்பிற் பெருகும். அமயம் நேர்ந்துழி விரித்து விளக்கப்படும்.

நிறை முறையோடு கூடிய நுகர்ச்சிகளால் உடம்பினை, அதனுள்ளே உத்தமனைக் கண்டு அடைதற் கேற்றவாறு, ஓம்புதல் வேண்டும். இவ்வாறு

ஓம்பாது உடம்பை அலட்சியம் செய்து இச்சை வசப்பட்டு உழலுங்கால் அஃது அழிந்து ஒழியும். ஒழியவே அதனுள் உத்தமனைக் கண்டு புருஷார்த்தங்களைப் பெற்று நித்தியத்துவம் அடைதல் முயற்கொம்பேயாகும். பின் வரும் பிரமாணங்கள் இவ் உண்மையை நன்கு வற்புறுத்துகின்றன.

திருமந்திரம்

உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டா
ருடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
யுடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே.
(ஷை 3ம். தந் 5-வது சரீரசித்தியுபாயம்1.)

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கி
லுறுப்புச் சிவக்கு முரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.
(ஷை—ஷை—பிராணாயாமம். 27.)

சிவவாக்கியர்

ஓடமுள்ள போதெலா மோடியே யுலாவலாம்
ஓடமுள்ள போதெலா முறுதிபண்ணிக் கொள்ளலாம்
ஓடமு முடைந்தபோது வொப்பிலாத வெளியிலே
ஆடுமில்லை கோலுமில்லை யாருமில்லை யானதே.

திருவாசகம்

கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடல மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும் வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.
(ஷை. குலாப்பத்து. 6.)

உடலம் அழிந்தால்—பிணமானால் ஈசனை அடைய முடியாது என்பதும், அது நித்தியத்துவம் அடைதலாற்றான் ஈசனைக் கண்டு அடைய முடியும் என்பதும் மேலே காட்டிய பிரபல சுருதிகளால் நன்கு வற்புறுத்தப்பட்டமை கண்டு கொள்க.

"அன்னத்தா லாய வுடம்பின் பயனெல்லா
முன்னோனைக் காட்டி விடும்."

என்னும் ஔவையார் அருண்மறையின் உண்மை தான் என்னை ? உடம்பினுள் முன்னோனாகிய கடவுளைக் காண்பது எவ்வாறு? எனின், சிறிது கூறுதும்:—

அன்ன ரசமே சோமம், இந்து, விந்து, மதி என்ப. சத்தே ரஸம். ரஸமே ப்ரஹ்மம். ப்ரஹ்மத்துக்கு ரஸம் என்னும் பெயரும் உண்டு. சத்து என்றால் தாது என்ப. தாதுவே அகிலம். உலகில் உள்ள சகல வஸ்துக்களிலும் சத்து உண்டு. அஃது இல்லாத பொருள் இல்லை. அன்னத்தைப் புறக்கணிப்பதால் உடம்பின் பயனை அடைய முடியுமா? முன்னோனைக் காண முடியுமா? முடியாது. பின்வரும் இருக்கு வேதப் பிரமாணமும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்துகின்றது.

இருக்கு வேதம்

வருக்கம் 5

அஷ்டகம் 2, அத்தியாயம் 5.
மண்டலம் 1. அநுவாகம் 24. சூக்தம் 8.
—11 இருக்குக்கள்,

உண்ணுதற் குயர் வோங்கிய தந்தையே
நண்ணு மத்த நலத்துறு பாலக!
யண்ணி யுன்னை யழகிற் றுதிப்பமா
லெண்ணியெத் துணையாளனு யெய்துக.(2)

(இ-ள்.) உண்ணற் கினிமையாயுள்ள அன்னமாகிய தந்தையே! மதத்தையூட்டும் சோமமாகிய தந்தையே ! உன்னை யடைந்து யாங்கள் அழகாகத் துதிப்போம். எங்களுக்குத் துணையாளனாக விருப்பாயாக.—(எ-று) [பிதோ—தந்தையே, பாலகனே என்றார் அன்னத்தை.]

அருகி னெர்தமாட் டொழுகுக மங்கல மார்ந்து
பெருகு நற்றுணை தம்மொடும் பிறங்குறு சிவனு
யிருமன த்துறு தின்பளி நண்பனே யின்பின்
மருவு மன்னமே சுகத்தினை மன்னுவிப் பவனே (3).

(இ-ள்.) மங்கலத் தன்மை நிறைந்து நல்ல உதவிகளோடு கூடிய சிவஸ்வரூபியாய் இருதிறப்படாமற் களங்கமற்ற சுகத்தைத் தருஞ் சகாயவானே! இன்பத்தோடு கூடியவனே! சுகத்தை யடைவிப்பவனே! அன்னமே! எங்களுக்கு சமீபத்தில் வர்த்திப்பாயாக—(எ-று.)

ஏனைய சூக்தங்கள் விரிவஞ்சி விடப்பட்டன. அமையம் நேரும் போது காட்டி விளக்கப்படும். அன்ன ரஸமே சோமம்—சிவஸ்வரூபம் என்பதும், அவ் அன்னமே தூல சூக்கும உய்வுக்கு இன்றியமையாதது என்பதும், அதனைப் புறக்கணிப்பதால் பிரமத்தைக் கண்டு அடைதல் முடியாது என்பதும் மேலே காட்டிய அமுத வாக்கியங்களால் வெள்ளிடை யாகும். தூல சரீரத்தை அன்ன மய கோசம் எனவும் வேதம் முறையிடுகின்றது.

சீவர்கள் பிறப்பின் நிலைமையைக் குறித்து எமது கிழவியார் தாம் அருளிய குறளில் முதலாவது அத்தியாயமாகக் கூறியிருப்பதை உற்று நோக்குவார்க்கு அன்னத்தாலாய உடம்பின் பயன் முன்னோனைக் காட்டிவிடும் என்பதன் உண்மை எளிதிற் புலப்படாததாகாது.

ஔவை குறள்

1 வது - வீட்டு நெறிப்பால்

பிறப்பினிலைமை

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன். 1

பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந்
தரமாறிற் றோன்றும் பிறப்பு. 2

ஓசைபரிச முருவஞ் சுவை நாற்றம்
ஆசை படுத்து மாறு. 3

தருமம் பொருள்காமம் வீடெனு நான்கும்
உருவத்தா லாய பயன். 4

நிலைமைக்கு நேர்நான்கு நீடங்கு முன்றே
உலவையிரண் டொன்று விண். 5

மாயன் பிரம னுருத்திரன் மகேசனொ
டாயுஞ் சிவமூர்த்தி யைந்து. 6

மாலய னம்பி மிரவிமதி யுமையோ
டேழுக் கிசழ்சத்தி யாறு. 7

தொக்குநிரத் தோடுன் மூளைநிண மென்பு
சுக்கிலந் தாதுக ளேழு. 8

மண்ணெடு நீரங்கி மதியொடு காற்றிரவி
விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு. 9

இவையெல்லாங் கூடி யுடம்பாய வொன்றி
னவையெல்லா மானது விந்து. 10

ஆதி சத்தியின் அவதாரம் எனப் போற்றப்படும் எமது பிராட்டியார் தமது சான்முனோகளாகிய அகில சிவர்களும் கடைத்தேறவேண்டுமென்னும் கருணை மேலீட்டினுலன்றே தெய்விக மலிந்த இத்திருக்குறளைத் திருவாய்மலர்ந்தருளினள்! இக்குறட்பாக்கள் பத்தினுள் ஒன்பதன் உட்பொருளைத் திரட்டி இறுதிப் பாவில் அமைத்திருப்பதைச் சிறிது ஆழ்ந்து நோக்குவோர் சதுரப்பாடுடைய வித்தக சொரூபமே இவ் அம்மையார் என்று கூறுதற்கு அஞ்சுவரோ? இறுதியில் மிளிரும் பத்தாவது செய்யுளில் "இவையெல்லாங் கூடி யுடம்பாய வொன்றில்" என்று அருளப்பட்டது. தூலம் சூக்குமம் எனப் பிரிபடாது அபேதமாகக் கலந்து கட்புலனுக்கும் பரிசத்துக்கும் அகப்படும் தூல உடம்பானது இன்ன பெட்புடன் பொலிகின்றதென்பதும், இத்துணைத் தத்துவங்களாகிய உறுப்புக்களால் ஆக்கப்பட்ட இவ்வுடம்பில் அத்தத்துவங்களின் மூலகாரணம் எனவும், சக்தி எனவும், கூறப்படும் தாதுகதத்துவம் ஓரிடத்திருந்து அந்த அந்த தத்துவங்களையும் இயக்கவேண்டுமென்பதே விதி—முறை—சட்டம் என்பதும் இறுதிச் செய்யுளால் நன்கு புலப்படுகின்றன அல்லவா? அந்த இடம்தான் யாதுகொல்? எனின்,

"அவையெல்லா மானது விந்து" என்னும் பாட்டிக் கூற்றே அதற்கு உத்தரமாகும் என்க.—சக்தி என்பது ஒன்றே எனினும், இயக்கத்தின் பொலிவுக்கு ஏற்பவும் நிறைக்கு ஏற்பவும் இயக்கப்படுகின்ற தத்துவம் என்னும் உறுப்பின் பஞ்சீகரணப் பெட்புக்கு ஏற்பவும் காரியம் பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளையும் குணங்களையும் பலன்களையும் உடையதாமாதலின், அத்துணை அரிய பெரிய ஆற்றலைத் தன்னகத்து அடக்கிக்கொண்டு, தூலத்துக்கு இன்றியமையாத மூலகாரணமாகவும் வேராகவும் விளங்குவது சகல வல்லபமும் பொருந்திய "விந்து" என அருளிப் போந்தனள் நமது பாட்டி என அறிக.

விந்து இல்லா நாள் யாது நிகழும்? அது தான் மரணம் என்பது; உடல் பிணமிய லடைவதென்பது. வித்து என்னும் விந்து அற்றுப் போமாயின் அன்றே—அந்த க்ஷணமே தூலம் கீழ் விழுந்து பிணமியலடையும்—சவமாகும் என்பது எவராலும் மறுக்கமுடியாததல்லவா? விந்து என்னும் வித்தின் ஆற்றல் நம்மனோர் சிந்தனை சொற் செயல்களுக்கு அளவுபடுவதாகுமா? நிறை முறை அறியாது இவ் விந்தைக் கெடுத்துச் சாதலடைவதே உலகியலாகின்றது. விந்து என்பதுதான் ஆசான். அவ் விந்துவை தப்புரவு செய்வது—விளைவேற்றுவது தான் மா கடினமான அத்தியாயம். அவ்விந்துவில் இருக்கும் களிம்பை—ஊத்தையை—ஊறலை—ஓதம் என்னும் கசிவை அகற்றுவதுதான் மா பெருநிறை யுடைய பயில்வு என்க. உலகமாக்களாகிய எம்போலியர்கள் இதை அறிவதென்பது முடியாத காரியம் என ஆம். "அவை யெல்லாம் ஆனது விந்து" என்றனள் பாட்டி. அவ் விந்து என்னும் கருவில் சகலமும் உண்டு என்க. அண்டாண்ட சராசரங்கள் அனைத்தும் உண்டு என அறிக. பிண்டத்துள் அண்டம் அண்டத்துள் பிண்டம் என்பதும் இதனால் நன்கு புலப்படும். எதற்கு எது ஆதி? எது அந்தம்? முன்பின் மொழியப்படாது. நிறை முறையான இல்லற ஒழுக்கத்தால் விந்துவானது அசுத்தம் நீங்கி—நீர் ஓதமாகிச் சலனமறத் தங்கினால் இருந்த விந்துவே நித்தியம் பெறும். இதனால் உள்ளத்து உதிப்பன எல்லாம் ஞானநேத்திரம் எனப்படும்; புருவ மத்தி குரு நேத்திரம் எனப்படும்; உபநயனம் எனப்படும், ஆரோகண நேத்திரம் எனப்படும், திருநாப் பேறு இதுவே. (விரிப்பிற் பெருகும். அமயம் நேரும்போது விரித்து விளக்கப்படும்.)

ஆதலால் "வித்து" என்றும் "விந்து" என்றும் கூறப்படும் "தாது" ஔவை குறளில் ஒன்பது செய்யுட்களாலும் விளக்கப்பட்ட தன்மை அனைத்தையும் உடையதாய் சுக்கிலம் (சுக் + இலம்) என்னும் பெயர்பெற்று விளங்குகின்றதென்பது நன்குபெறப்படும். பெறப்படவே, தூலத்தினின்று சூக்குமத்தை விளைவேற்றவேண்டும் என்னும் விதி—முறை—தத்துவம் வேதத்தால் முறையிடப்படுவதன் உட்பொருள் என்னை? என்று ஆராயுமிடத்து, அரிய பெரிய மகத்துவம் பொருந்திய இவ்வெழில்பெரு சுக்கிலம் எனும் விந்துவே அப்பயில்வுக்குரிய திறவுகோல் என்பது சொல்லாமலே அமையும். இது அமையுமாறு எங்ஙன்? நிறை முறையான இல்லற ஒழுக்கினாற்றான் அமைதற்பாலது என்க. இதனாற்றான் "இந்திரிய நிரோதம்" என்னும் வாய்மையான "பிரமசரியம்" சித்திக்கும் என்க. இவ்விந்து தான் தூலத்துக்கு வேர்; தூலம் என்னும் தேருக்கு "அச்சு" என்ப. இதுவே இடம். எதற்கு—எவருக்கு இடம்? கடவுளுக்கு இடம்—இருப்பு—குடியிருப்பு என்க. சிவன் வசிக்கும் தானம், சிவனுகிய சிவன் வசிக்கும் தானம் என்க இதன் மாற்றமே "ஓஜம்" எனப்படுவது. ஓஜம் என்றால் என்னை? அதுதான் (ஓ + ஜம்) பிரணவத்தின்—பிரணவ வடிவின்—ஓ வடிவின் பிறப்பிடம்—உற்பத்தித் தானம் என்க. அதர்வம் மாண்டூக்கியம் முதலிய உபநிடதங்கள் பிரணவன் சிவனே எனக்கூறுதலும் அறிக. இந்த இடத்திற்றான் நந்தி கொலுவிருந்து கோலோச்சுகின்றார். இக்கடவுளைக் காண்பது எப்படி? சற்குருநாதன் அருளால் பெறும்

வாய்மையான சாதக யோகங்களாற்றான்—மௌன வித்தையாற்றான் காணவேண்டும்—கண்டு அடைய வேண்டும்.

பின் வரும் பிரமாணம் இவ் வுண்மையை நன்கு வற்புறுத்துதல் கண்டு கொள்க:

ஞானக் கும்மி

விந்து விருந்த தலந்தனிலே குரு
நந்தி யிருந்தார் கொலுவாகி
சிந்தை தெளிந்து மகாரம் வைத்தாலந்தச்
சிமானைக் காணலாம் ஞானப்
பெண்ணே. (57)

இடம் வேறு பொருள் வேறன்று. இடமே பொருள். பொருளே இடம். ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை சரீரத்துக்கு "உள்" ஆகவும், சரீரத்துக்கு இன்றியமையாத தாதுக்கள் ஏழனுள் "கடை" ஆகவும் விளங்குவது விந்து. இதுதான் (கடை + உள்) கடவுள் எனப்படும் என்க. விரிப்பிற் பெருகும். அமயம் நேரும்போது விரித்து விளக்கப்படும். இவ் ஆசானைக் கண்டு ஆசானுக்கு இனமாகிய சத்தியையும் கண்டு இரண்டையும் நிறைகொண்டு பஞ்சிகரணிப்பது தான் ஆசானை விளைவேற்றல் என்பதன் பொருளாகும்—ஆசானை விளைவேற்றற்குரிய சாதனமாகும். இதனையே "பஞ்சம ஆகுதி" என ஐதரேயம் முறையிடுகின்றது என அறிதற்பாற்று. தன்னிலையாகிய விந்துவும் முன்னிலையாகிய நாதமும் இனமல்லவா? ஆதலால் பெரு நிறையுடைய இவ் அரிய பயில்வு வாய்ப் பேச்சால் முடியுமா? ஆசான் அருளின்றி இதனை ஒரு சிறிதும் அறியமுடியாது. அளவு கடந்த ஆசையாகிய தற்சுதந்திரமென்னும் அசுத்த காம உணர்ச்சியினால் உந்தப்பட்டு இப்பயில்வைத் தானே கண்டு பிடித்ததாக எண்ணி நிறை முறையில்லா "இணைவிழைச்சு" என்னும் படுகுழியில் ஒருவன் விழுவானாயின், அவன் தன் ஆயுள் அதிவேகமாகக் குறுகப் பெறுதலாலும் விரைவில் தென்புலக் கோமகனுக்கு நல்விருந்தாதல் திண்ணம். இறையனார் அகப்பொருள் உண்மையையும் கோவையின் சீர்மையையும் அறிவது என்றால், அம்மம்ம! எத்துணை மதிப்பொலி வுடையார்க்கும், ஆசான் அருளின்றி முடியாத காரியமே! இது சத்தியம்! உலக மாக்களாகிய எம் போலியர்கள் இதனை ஒரு சிறிது அறியினும் உடனே காமுகராவர்; சடிதியில் மாண்டு போவர். ஆதலாற்றான் இதனை மறை என்றனர்—மறை பொருளாக்கி விட்டனர், பக்குவ சிவர்க்கே உரியது பெரு நிறையுடைய இப் பயில்வு என்க. செடியாராக்கைத் திறமற வீசலே—படிற்றாக்கையை விட்டு எம்பெருமானைப் பூணுதலே இப் பயில்வால் ஆம் பேறு என்க. பின்வரும் வேதவாக்கு இவ் வுண்மையை நன்கு வற்புறுத்துதல் கண்டு கொள்க.

திருமந்திரம்

விந்துவு நாதமும் விளைய விளைத்தது
வந்தவிப் பல்லுயிர் மன்னுயி ருக்கெலா
மந்தமு மாதியு மாமந்தி ரங்களும்
விந்து வடக்க விளையுஞ்சி வோகமே.
(ஷை 7ம். தந். 21வது. விந்து ஜயம். 33)

திருவாசகம்

என்புள் ளுருக்கி யிருவினையை யீடழித்
[துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்
[மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய வுள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை யாண்டானைக்
[கொண்டன்றே.
(ஷை. குலாப் பத்து. 3)

என்பின் உள் என்பது யாது? என்புள் இருப்பது உருகவேண்டும் எனவும் அதனால் இருவினையும் ஈடழியும் எனவும் அதனால் துன்பம் நீங்கும் எனவும், துவந்துவங்கள் (தன்னிலை முன்னிலைகள்) தூய்மை யடையும் எனவும், அதனால் உடலினுள்ள அசுத்த நிறை நீங்க அத்தனுள் எம் பெருமான் பூரணமாய் குடிபுகுவன் எனவும் மணிவாசகப் பெருமான் அருளிய உண்மைகளை ஆழ்ந்து நோக்குக.

இதுகாறும் கூறியவைகளால் அன்னத்தாலாய உடம்பின் பயன் அதனுள் மறையாய்—மறை பொருளாய் இருக்கும் முன்னோனாகிய கடவுளைக் கண்டு அடையப் பெறுதலேயாகும் என்னும் வேத உண்மை ஒருவாறு உணரத் தகும். இவ் வுண்மை அமயம் நேரும்போது மேலும் விரித்து விளக்கப்படும்.

சுபம்.

மதிப்புரை

பாவ வருஷ

சௌர சாந்திரமான திருக்கணித

பஞ்சாங்கம்

யாழ்ப்பாணத்து மட்டுவில் வாசரும், பஞ்சாங்க கணன சோதிட பரம்பரைப் பண்டிதரும் வடகோவை ப்ரம்மஸ்ரீ சிவகடாக்ஷிக் குருக்கள் அவர்கள் புதல்வருமாகிய ப்ரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் கணித்து, சென்னை, ஜ்யோதிர் பூஷணம் ப்ரம்ம ஸ்ரீ T. S. விசுவநாத சிரௌதிகள் B. A. அவர்களால் பார்வையிடப்பட்டு வெளிவந்த ஷை பஞ்சாங்கப் பிரதி ஒன்று எமது பார்வைக்கு அனுப்பப் பட்டது. சிறிது நேரம் இடையிடையே தூலமாகப் பார்வையிட்ட அளவில், இப் பஞ்சாங்கம் மற்றைய பஞ்சாங்கங்களினும் உருவத்தாலும் பொருளடக்கத்தாலும் சிறந்ததாகப் புலப்பட்டது. "பஞ்சாங்க பரிபாஷை விளக்கம் முதலியனவாக இதன்கண் வெளியிடப்பட்ட விஷயங்கள் சாமானியமாக வாரந்திதி முதலியவற்றை அறிபவர்க்கு மட்டுமேயன்றி சோதிடம் கற்கத் தொடங்குவோர்க்கும் மிக்க பயன் அளிப்பனவாய் ஆங்கில கணனமுறைக்கும் ஒவ்வும்படி மிக்க ஆராய்ச்சியோடு செய்வனம் அமைந்துள்ளமை போற்றற்பாலதே யாகும். பாவ வருடப் பிறப்பு. ஸ்ரீமுக ஆண்டு பங்குனி மீ 31-ம் தேதி வெள்ளிக் கிழமை இரவு உதயாதி நாடி 31 விநாடி 51 இல் (மணி 6–48) துலா லக்கினத்தில் நிகழும் என்பதும், சனிபகவான் நிகழும் ஸ்ரீ முக ஆண்டு பங்குனி மீ 19ந்தேதி

உயிர் வருக்கம்

உயிர் வருக்கங்கள் தாவரம் ஊர்வன நீர்வாழ்வன பறவை விலங்கு மனிதர் தேவர் என எழுவகையுள் அடங்கும் என்ப. தாவரம் முதல் மனிதர் ஈருக உள்ள உயிர் வருக்கங்களுக்கு ஓரறிவு முதல் ஆறறிவு வரை ஒவ்வோர் அறிவு மட்டுமே ஏற்றமாக உள்ளன என்று சமயநூல்களென வழங்குவன சிலவும் அவற்றை அடிப்படியாகக் கொண்டு வித்துவான்கள் சிலர் எழுதிய நூல்களும் கூறுகின்றன. பன்னெடுங்காலமாகவே இக் கொள்கையானது சைவசமயிகள் எனப்படுவோர் உள்ளத்து வேத உண்மை போல வேரூன்றி விட்டமையால், தாவரங்கள் ஓரறிவு மட்டுமே உடையன எனவும் அவற்றைக் கொன்று உண்பதால் வரும் பாவம் மிகச் சிறிது எனவும், அச்சிறிய பாவமும் கடவுளுக்கும் குருவுக்கும் அக்கினிக்கும் படைத்து உண்ணுங்கால் நீங்கிவிடும் எனவும், இதுவே முத்திநெறி எனவும் பலரும் வற்புறக் கூறி அநுசரிப்பது பெருவழக்காயிற்று. தாவர முதலியன ஓரறிவு முதல் ஒவ்வோர் அறிவுமட்டுமே ஏற்றமாக உள்ளன என்னுங் கொள்கை அறியாமை பற்றியதே என்பது பின்வரும் பிரபல சுருதிப் பிரமாணத்தால் நன்கு புலப்படும்:

பிரகதாரண்ய உபநிடதம்

“ஆகாசம் வாயு அக்கினி ஜலம் “பிருதிவி என்பன பஞ்ச பூதங்கள்; “நேத்திரம், துவக்கு, இரசனம், கிரா “ணம், சுரோத்திரம் என்பன பஞ்ச “இந்திரியங்கள்; பிராணன், அபா “னன், சமானன், வியானன், உதா “னன் என்பன பஞ்சப் பிராணன் “கள்; மனம். இப்பதினாறு கலைகளின் “கூட்டத்தை வேத முணர்ந்த பெரி “யார் சூக்கும சரீரம் என்பர்.

“வாக்கு, பாதம், பாணி, பாயு, “உபத்தம் என்பன பஞ்சகன்மேந் “திரியங்கள். சுரோத்திரம், தொக்கு, “சக்ஷு, ரசனம், கிராணம், என்பன “பஞ்ச ஞானேந்திரியங்கள். “மனம் புத்தி சித்தம் அகங்காரம் “என்பன அந்தக்கரண சதுஷ்டயம்.

“இவ்வெல்லா வாக்காதிகளும் “சூக்கும சரீரத்தின் அவயவங் “களாம். இவ்வாக்காதி அவயவங் “களும் பிரஹ்ம லோகத்தின்கண் “இரா நின்ற ஜங்கம ஜீவர்கட்கும் “மனுஷ்ய லோகத்தின் கண் இரா “நின்ற ஜங்கம ஜீவர்கட்கும் சமா “னங்களேயாம். சிலவிடங்களில் “வெளிப்படுதலின் குறைவு மிகுதி “களைக் குறித்து அவற்றின் விஷமத் “தன்மையும் தோற்றும். வாக்கு முத “லாகப் பிராணன் ஈருய்ச் சூக்கும சரீ “ரத்தின் எத்துணை அவயவங்கள் “உளவோ, அவை மனுஷ்யாதி ஜங் “கம சரீரங்களில் இருப்பனவே “போல தரு முதலிய தாவர சரீரங்க “ளிடத்தும் உள. ஆனல், மனுஷ் “யாதி ஜங்கமர்களிடத்தே அவ்வாக் “காதி இந்திரியங்களின் வெளிப்படு “தல் உண்டாதலே போல, தரு “முதலிய தாவர சரீரங்களின்கண் “அவற்றின் வெளிப்படையான “வெளிப்படுதல் உண்டாதல் இல்லை. “ஆதலால் தரு முதலிய தாவர சரீ “ரங்களும் மனுஷ்யாதி ஜங்கம சரீ “ரங்களுக்குச் சமானங்களாம்.”

(தொடரும்)

ஞாயிற்றுக்கிழமை கும்பராசிக்கு எழுந்தருளினர் என்பதுமே வாக்கியபஞ்சாங்கத்திற்கு மாருக இதன்கண் எடுத்து விளாநித்து கிறுவப்பட்ட விசேட அம்சங்களாகும் இப்பஞ்சாங்கமும் கணன பண்டிதரும் நீடு நிலவு வண்ணம் இறைவன் அருள்புரிக.

இத்தகைய பஞ்சாங்கத்தைப் பலரும் பெற்றுப்பயனடைவாராக. இதன் விலை அணு 4. இது S.சுப்பிரமணியஐயர் “தில்லைவனம்” மட்டுவில் சாவகச்சேரி சிலோன் என்னும் விலாசத்தாரிடம் பெறற்பாலது.

[ப—ர்.]

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

“கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி”

என்றம்வருவனவற்றுள் “கொன்றையந் தீங்குழல்” “ஆம்பலந் தீங்குழல்” “முல்லையந் தீங்குழல்” என்பனவற்றை,

“நீக்குமா லைழக்கு மாயர் கீடிசை கிறைய ஆது
மூக்கமேன் றளவே யாலே யோதைய தளவே யுந்த
வாக்குநீல் கொன்றைமீன்பா டாவத்தில் கொன்றைமாற்றத்
தேக்குலே யெனற் சாப்பின் றிறத்தலே யாற்று மன்றே”

என்னும், செம்புளிலமைத்தும், (தளவு—முல்லைக்குழல் கொன்றை—கொன்றைக்குழல், வே—வேய்ங்குழல், ஆம்பலும் வேயு மொன்று.) இன்னுஞ் சிலப்பதிகாரத்திற் கூறிய மதிற்பொறிகளிற் சிலவற்றை இதனுளமைத்தும் பாடியிருத்தல் காண்க. அன்றியும், அகநானூற்றில்,

“வலந்த வள்ளி மரனோங்கு சாரற்
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள்
இன்னா விசைய வோசை பயிற்றலின்
ஏக லடுக்கத் திருளளைச் சிலம்பின்
ஆகொள் வயப்புலி யாகு மஃதெனா”

என்று வருமடிகளின் கருத்தை,

“கான்குழற் குறத்தி நல்லார் கனிமலர் கொள்ளுமோதைக் கான்கிளைக் காப்புச் செய்தங் கண்டர்கின் றாற்று மோதை”

என அமைத்தும் பாடியுள்ளார். இதனல் இவர் சங்க நூல்களிலும் பயிற்சியுள்ளவர் என்பது பெறப்படும்.

(தொடரும்)

Sandhanam Printing Works, Pondicherry.

Le Gérant R.Nagarattinam.